IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC : 33/2024 PW-1 (LW- 1)

Name : பிரேமா Caste :

Husband Name : கோபால் Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------2024

Chief Examination : Date : 25.06.2024

முத்தான் செட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். எனது கணவர் இறந்து 13 வருடங்கள் ஆகிறது. எதிரியை தெரியும். அவர் எனது உறவினர். எனது மகனும் துரைமுருகனின் அக்கா ரம்யாவும் காதல் திருமணம் செய்து கொண்டார்கள். எனது மகனுக்கும் எனது மருமகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு கோபித்து கொண்டு துரைமுருகன் வீட்டிற்கு சென்றுவிட்டார். எனது மகன் ஒருமாதம் காலம் கூப்பிட செல்லவில்லை. பின்னர் எனது மருமகளை கூப்பிட எனது மகன் சென்றாார். ஒரு நாள் இரவு 7மணிக்கு நானும் எனது மகனும் எங்கள் விட்டில் இருந்த போது உறவினர் ஒருவர் வந்து துறைமுருகனும் இன்னும் சில நபர்களும் சேர்ந்து எனது மகன் கோபிநாத்தை அடித்து போட்டுவிட்டார் என்று சொன்னார்கள். நாங்கள் அங்கு சென்று என்ன நடந்தது என்று கேட்டபோது யாரும் பதில் சொல்லவில்லை. எனது மகனுக்கு பின் மண்டையிலும் நெற்றியின் முன்பக்கம் அடிப்பட்டிருந்தது, மூக்கில் ரத்தம் வந்தது. பின்னர் ஆம்புலன் வரவும் அடிப்பட்ட எனது மகனை ஆம்புலம் மூலமாக நாமக்கல் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம். எனது மகனுக்கு பேச்சு மூச்சு இல்லை என்பதால் சேலம் மருத்துவணைக்கு அழைதது செல்லுமாறு கூறினார்கள். நாங்கள் சேலம் அரசு மருத்துவமணைக்கு செல்வதற்காக பாதிதூரம் அழைத்து சென்று விட்டு பின்னர் சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் மேல் சிகிச்சைகாக சேர்த்தோம். 3 நாட்கள் எனது மகன் சிகிச்சையில் இருந்தார். சேலம் தனியார் மருத்துவ மணையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து நடந்ததை எழுதிக்ககொண்டு என்னிடம் கையொழுத்து வாங்கினார். புகாரில் உள்ள கையொழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

எனக்கு எனது உறவினார் வனித்தாவின் மகன் வந்து தகவல் சொன்னார். இந்த சம்பவத்தை நேரிடையாக பாாக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா

என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை

இல்லை

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**